ISSN:2582-9599

# கற்றல் கற்பித்தலும் வளர்ச்சி நிலைகளும்

முனைவர். இரா. முருகன்
உதவிப் பேராசிரியர் , பெரியார் அரசு கலை
கடலூர் கல்லூரி – 607001. anandamurugandde@gmail.com

12

**ஆய்வுச்சுருக்கம்**

கற்றல் கற்பித்தல் கூறுகள் பண்டைய காலம் முதல் தற்போது வரை பல்வேறு படிநிலைகளைத் தாண்டி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றது. பண்டைய கால கற்றல் கற்பித்தல் முறையான குருகுல முறை இன்று மெய்நிகர் கற்றல் முறையாக பரிணாம வளர்ச்சியடைந்துள்ளதைப் பற்றியும், தொடக்கக் கல்வி, இடைநிலைக்கல்வி, கற்றல் கற்பித்தல் சூழல் ஆகியவை குறித்தும் இவ்வாய்வுக்கட்டுரை ஆய்கின்றது.

**முன்னுரை**

கற்றல் மனித வாழ்வில் மிக முக்கியமான செயல் ஆகும். கற்றல் என்பது வெறும் "எழுத்துக் கல்வியைக் கற்றல்" என்பதைத் தாண்டி, நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ நடைபெறுகின்றது. இன்றைய காலகட்டத்தில் கற்றல் கற்பித்தலில் பல புதிய முயற்சிகள் உருவாகியுள்ளன. பல புதுப்புது முயற்சிகள், அனுபவங்கள், திறன்கள் ஆகியவற்றை கற்றலின் வழியாக மனிதன் பெறுகின்றான். இத்தகைய தொடர் செயலான கற்றல் என்பது காலத்திற்கு ஏற்ப பல்வேறு வடிவங்களில் பெறப்படுகின்றது. கற்றல் என்பதற்கு பல விதமான வரையறைகள் கொடுக்கப்பட்டாலும் "கற்றல் என்பது புதியதாக ஒன்றை கற்றுக் கொள்வதும், அதை நிலைநிறுத்துவதுமே"1 (கல்வி உளவியல், ப.149) என்று உளவியல் அறிஞர் ஸ்கின்னர் குறிப்பிடுகின்றார்.
கல்வியலாளர்கள் தற்காலத்தில் மாணவர்களுக்கான கற்றலில் பல புதிய அணுகுமுறைகளைக் கையாள்கின்றனர். விரிவுரை முறை, குழுக்கற்றல் முறை, செயல்வழிக் கல்வி, புலன்வழிக் கல்வி போன்ற பல்வேறு கற்றல் கற்பித்தல் முறைகள் தற்காலத்தில் மாணவர்களுக்காகக் கையாளப்படுகின்றது. தற்கால கற்பித்தல் கற்றல் அணுகுமுறைகள் குறித்து இவ்வாய்வுக்கட்டுரை ஆய்கின்றது.

**கல்வியின் சிறப்பு**

"தனக்குப் பாழ் கற்றறிவில்லா உடம்பு"2 (நான்மணிக்கடிகை, பா.20)என்ற நான்மணிக்கடிகை வரி கல்வியின் மேன்மையை உணர்த்துகின்றது. ஒரு மனிதன் கல்வி கற்றான் எனில் அவன் கற்ற கல்வி என்றுமே அழியாச் செல்வமாகவே போற்றப்படும். பொன்னும் பொருளும் சேர்த்தாலும் அவை அழிந்து விடும். ஒருவன் கற்ற கல்வி என்றுமே அழியாது என்பதை மெய்ப்பிக்கும் விதமாக "சமுதாயத்தில் ஆண், பெண் அனைவருக்கும் உண்மையான கல்வியை அளிப்பது நமது கடமையாகும். அந்தக் கல்வி மூலமாக அவர்கள் தங்களுக்கு நல்லது எது? கெட்டது எது? என்பதை தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்" என்று கல்வியின் பெருமையினை விவேகானந்தர் எடுத்துரைக்கின்றார்.

**தொடக்கக் கல்வி – பள்ளிப் பாடங்கள்**

மாணவ பருவத்தில் கல்வி கற்றல் தொடங்கும் நிலை ஆரம்பக் காலம் (அ) தொடக்கக் காலம் ஆகும். தொடக்கக் காலக் கல்வியில் எவ்வாறு கற்றல் வேண்டும் என்பதற்கு கல்வியியாளர்கள் வரையறைகள் கொடுத்துள்ளனர். "மரியா மாண்டிச்சோரி – புலன்வழிக்கல்வி கற்றலையும், புரோபல் – கிண்டர்கார்டன் கல்விமுறையையும், காந்தி – ஆதாரக்கல்வி முறையினையும்"3 (இந்தியக் கல்விமுறை, ப.44) குறிப்பிடுகின்றனர். இவற்றில் ஏதாவது ஒன்றினை மையமாகக் கொண்டு ஆரம்ப நிலை அமையும்.

1. நல்ல பழக்க வழக்கத்தினை அறிதல்
2. எளிய சொற்களைப் படித்தல், எழுதுதல்
3. புலன்களை நன்கு இயக்கும் திறன் பெறுதல் (ஆடுதல், பாடுதல், நடித்தல்)
4. செய்து கற்கும் செயல் வழிக்கற்றல்

போன்றவை தொடக்கக் கல்வியின் மையமாக அமைந்துள்ளன.

**இடைநிலைக்கல்வி**

இடைநிலைக் கல்வி பெரும்பாலும் ஆசிரியர் மையக் கல்வி முறையாகக் காணப்படுகின்றது. பெரும்பாலும் விரிவுரைமுறை, செய்துகாட்டல் முறை, குழுக்கற்பித்தல் முறை போன்ற முறைகள் இடைநிலைக் கல்வியில் கையாளப்படுகின்றது.

1. இடைநிலைக் கல்வி கற்றலில் மாணவர்களின் அறிவியல், கணிதம் போன்ற பாடங்களில் அதிக கவனம் செலுத்துகின்றது.
2. தாய்மொழிக்கல்வியோடு ஆங்கிலத்தில் உரையாட துணை செய்தல்.
3. சுற்றுச்சூழல் கல்வியின் மூலம், இந்தியா மற்றும் உலக நாடுகளது இயற்கை அமைப்பு, வரலாறு, பண்பாடு, புவியியல் சார்ந்த செய்திகளை நுணுக்கமாக அறிந்து கொள்ளச் செய்தல்.
4. இன்றைய உலகம் கணினி உலகமாகத் திகழ்கின்றது. அதில் போதிய அறிவு பெற செய்தல் இன்றியமையாதது என்பதனால் மாணவர்களின் இடைநிலைக் கல்வியில் கணினி கற்பிக்கப்படுகின்றது.

கற்பித்தல் என்பது ஆசிரியரானவர் கல்வியினை எளிமைப்படுத்தி மாணவர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துரைக்க முற்படுதல் ஆகும். எந்த வகையான கற்றல் நோக்கமாக இருந்தாலும் ஆசிரியர் கையாளும் திறனைக் கொண்டு முழுமையான அடைவினை மாணவர்கள் அடைய முயற்சி செய்கின்றார்.

கற்பித்தல் - கற்றல் சூழல்

முறையான கற்றல் கற்பித்தலானது கட்டுப்பாட்டு சூழலில் நிகழ்கின்றது.. மாணவர்களின் தொடர் அனுபவத்தைப் பகிர்கிறது. கற்றல் கற்பித்தல் சூழலை உருவாக்கும் கூறுகள் நான்கு நிலையாக உள்ளன. அவை,

1. பாடப்பொருள் / உள்ளடக்கம் (அ) கற்றல் அனுபவங்கள்
2. ஆசிரியர் கற்றல் அனுபவங்களை வழங்குபவர்
3. மாணவர்கள் (அ) கற்றல் அனுபவங்களை வழங்குபவர்
4. கற்றல் அனுபவங்களை வழங்குவதற்கான முறைகள்

ஆசிரியர் முறையான அறிவுறுத்தல் திட்டமிடுதல் மற்றும் கருத்தினைக் கூறுவதன் மூலம் தான் கற்ற அனுபவங்களைப் பரிமாறிக் கொள்கிறார். கற்றல் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான விரிவுரை, செய்துகாட்டாமல் கலந்துரையாடல், கதைசொல்லல், கேள்வி பதில், கருத்தரங்கம், குழுவிவாவதம், செயல்திட்டப்பணி போன்ற கற்பித்தல் உத்தியில் பல நுட்பங்களை தற்காலத்தில் பயன்படுத்த வேண்டிய சூழல் உருவாகின்றது.

ஆசிரியரின் பயனுள்ள கற்றல் அனுபவங்களை வழங்குவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. சான்றாக. உயிர்வேதியியல் ஆசிரியர் மனித இனத்தின் வாழ்வியலை விளக்க இதயத்தின் செயல்பாட்டினைக் கூற மனித இதயம் தேவை. அதனை நேரடியாகக் காட்ட இயலாது. இது ஆசிரியர் எதிர்கொள்ளும் சிக்கலாகும். இதனைத் தவிர்க்க தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி செயற்கை இதய செயல்முறையினைச் செய்து காட்ட முன்வரலாம்.

**கற்றல் கற்பித்தல் சூழலின் வகைகள்**

கற்றல் கற்பித்தல் சூழலின் வகைகள் நான்காகப் பிரிக்கப்படுகின்றது. அவை

1. நேருக்கு நேர் கற்றல் கற்பித்தல் சூழல்
2. நெட்வொர்க் செய்யப்பட்ட கற்றல் கற்பித்தல் சூழல்
3. திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் கற்பித்தல் சூழல்
4. மெய்நிகர் கற்றல் கற்பித்தல் சூழல்

என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. நேருக்கு நேர் கற்றல் கற்பித்தல் சூழல் கற்றல் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் ஆசிரியர் மாணவர்கள் (கற்பவர்கள்) இடையே நடக்கும் நிகழ்வு ஆகும். குருகுலக் கல்வி முறையினை இதற்குச் சான்றாக் கொள்ளலாம்.
2. நெட்வொர்க் செய்யப்பட்ட கற்றல் கற்பித்தல் சூழல்

இது தொலைபேசி, கணினி, மொபைல் போன்ற நெட்வொர்க் தொழில்நுட்பங்களால் உருவாக்கப்பட்டது. தொலைபேசி உலகில் எந்த மூலையில் இருக்கும் மக்களுடன் இணைப்பது என்பது தெரிந்த செய்தியாகும். பயிற்சி, ஆலோசனை, முக்கியமான தகவல்களை வழங்க தொலைபேசி துணைபுரிகின்றது. உந்துதல், கவனம், தேவைகளை நினைவு கூறுதல், கற்றல் வழிகாட்டுதலை வழங்குதல், பின்னூட்டம் வழங்குதல் முதலிய பங்களிப்பினைச் செய்கின்றது என்றால் மிகையாகாது.

3. திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் கற்பித்தல்

திறந்த கல்வி என்பது கட்டமைப்பு சாதனமாகும். கடினத்தன்மையைக் குறைக்கவும், கல்வி முறையில் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கவும் ஆசிரியரானவர் மாணவர்களை குழுவாக்குதல், கருத்தரங்குகள் நடத்துதல், எளிமையான மொழியில் கற்றல் போன்ற செயல்முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

4. மெய்நிகர் கற்றல் கற்பித்தல்

இணையத்தில் மாணவர்கள் படிக்கவும், சொந்தமாகக் கற்றுக் கொள்ளவும், கல்வி கற்றுக்கொள்ளவும், கல்வி அறிவைப் பெறவும் ஆசிரியர்களைச் சந்தித்து மற்ற மாணவர்களுடன் தொடர்பு கொள்ளவும் துணைபுரிகின்றது.

**முடிவுரை**

கற்பித்தல்-கற்றல் செயல்பாடானது பண்டைய காலம் தொட்டு இன்று வரை பல பரிமாணங்களை அடைந்து உள்ளது. அதன் தற்போதைய நிலையாக தொடக்க நிலையில் மாணவர்மையக் கற்றல் முறையும், உயர்கல்வியில் மெய்நிகர் கற்றல் முறைகளையும் பயன்படுத்தும் வகையில் பெரும் மாற்றங்களை அடைந்துள்ளது என்பதனை இந்த ஆய்வுக்கட்டுரை வாயிலாக உணர முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. ஈ.ஜெயராஜ்,

கல்வி உளவியல் (2014),

ஜெயம் பதிப்பகம்,
திருச்சி-23.

2. சாமி.சிதம்பரனார்,

நான்மணிக்கடிகை (2019),

சாரதா பதிப்பகம்,
சென்னை-40.

3. தமிழ்நாடு பாடநூல்கழகம் (முதற்பதிப்பு - 2009),

இந்தியக் கல்விமுறை,

கல்லூரிச் சாலை, சென்னை-6